பக்கங்கள் 17+ 02

# மாலை முரசு

## யாழில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் மரணம்



யாழ்ப்பாணத்தில் மின் அழுத்தியைப் பயன்படுத்திய போது மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள் 04

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 08 புதன்கிழமை 24.09.2025 | அதிர்வு 55

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்



# வோல்கர் – அநுர நேரில் சந்திப்பு!

## மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை எட்டியுள்ள முன்னேற்றம் குறித்து ஆராய்வு

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கும் இடையிலான சந்திப்பு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலா 04








# தியாக தீபத்தின் 10ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வு

தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தலில் 10 ஆம் நாள் நிகழ்வு இன்று புதன்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் போராளிகள் மற்றும் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் கலந்துகொண்டனர்.









# மேலதிக கொடுப்பனவை வழங்குமாறு கோரி அரச சித்த மருத்துவ அதிகாரிகள் போராட்டம்

**(பிரபாகரன் டிலக்சன்)**

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரால் ஆயுர்வேத மருத்துவர்களுக்கான மேலதிக கொடுப்பனவை வழங்கக் கோரி இன்று வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரால் நாடளாவிய ரீதியில் மாகாண ரீதியில் சுழற்சி முறையில் போராட்டம் முன்னெடுக்கப்படும் நிலையில் இன்று வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இன்று நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம் – கைதடி சித்த மருத்துவ வைத்தியசாலைக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டமும் இடம்பெற்றது.

இதன்போது ஆயுர்வேத வைத்தியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், மேலதிக கொடுப்பனவை உடன் வழங்கு, சம்பள மறுசீரமைப்பு எங்கே, நிர்வாகமே மமதை வேண்டாம், பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தா போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.













## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

யாழ்ப்பாணம், உடுவில் பகுதியைச் சேர்ந்த விஷ்ணுராஜ் ஜதுர்மன் (வயது 21) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழுந்தவர் ஆவார்.

மேற்படி இளைஞர் குளித்துவிட்டு வந்து உடலில் ஈரத்துடன் மின்னழுத்தியைப் பயன்படுத்தியபோது, அவரை மின்சாரம் தாக்கியுள்ளது.

இதையடுத்து, வீட்டில் இருந்தோர் இளைஞரை மீட்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது, அவர் உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வோல்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் அலுவலகத்தில் அமெரிக்க நேரப்படி நேற்று பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர், ஜனாதிபதியை அமோகமாக வரவேற்றதுடன் கடந்த வருடத்தில் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை எட்டியுள்ள முன்னேற்றம் தொடர்பான விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை நிரந்தர பிரதிநிதியும் முன்னாள் பிரதம நீதியரசருமான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரியவும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.





# தென்னாபிரிக்க ஜனாதிபதியை நியூயோர்க் நகரில் சந்தித்த அநுர

ஐக்கிய நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசாவைச் சந்தித்துப் பேசினார்.

நியூயோர்க் நகரில் அமெரிக்க நேரப்படி நேற்றுப் பிற்பகல் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தென்னாபிரிக்கா, இலங்கை இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை நிரந்தர பிரதிநிதியும் முன்னாள் பிரதம நீதியரசருமான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# போதை அதிர்ச்சி

இலங்கையில் ஐஸ் போதைப் பொருள் உட்பட பெரும்பாலான போதைப் பொருள்களுக்கு அடிமை யானவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரத் திற்கு கீழே கல்வி நிலைகளைக் கொண்டுள்ளனர் என்றும், அவர்க ளுக்கு தீவிர மறுவாழ்வு தேவைப் ப டுவதாலும், வேலையில்லாமல் இருப்பதாலும் அவர்கள் இப்போது அரசுக்குப் பெரும் சுமையாக மாறி விட்டனர் எனவும் சமீபத்திய ஆய் வில் தெரியவந்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த பேராசிரியர் வசந்த அதுகோரல மற்றும் அவரது குழுவி னரால் நடத்தப்பட்ட இந்த ஆராய்ச்சி, 2023 ஆம் ஆண்டில் சிறைத் தரவுகள் மற்றும் போதைப்பொருள் தொடர் பான குற்றங்களின் வடிவங்களைப் பகுப்பாய்வு செய்தது. அது வெளிப் படுத்தும் தகவல்கள் மலைக்க வைப்பவை.

அவர்களின் ஆய்வுத் தகவல்களின் படி, 2023 ஆம் ஆண்டில் பல்வேறு குற்றங்களுக்காக 185,056 நபர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களில், 46,939 பேர் குற்றவாளி கள். அவர்களின் 29,192 வழக்குகள் நேரடியாக போதைப்பொருளுடன் தொடர்புடையவை.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருநாகல் ஆகிய நான்கு முக்கிய மாவட்டங்களில்தான் போதைக்கு அடிமையானவர்கள் அதிக எண்ணிக்கையில் கைது செய் யப்பட்டுள்ளனர் என்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

வயதைப் பொறுத்தவரை, தண் டனை பெற்றவர்களில் 8,491 பேர் 22 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள். அதே நேரத்தில் 8,941 பேர் 30 முதல் 40 வயதுடையவர்கள். இது, இளம் மற்றும் நடுத்தர வயதுடைய பெரிய வர்கள் போதைப் பொருள் பாவ னையால் மிகவும் பாதிக்கப்பட்ட குழுவாக இருப்பதைக் குறிக்கிறது.

இந்த ஆய்வு, போதைப் பழக்கத் திற்கு அடிமையான பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்ற அதிர்ச்சித் தகவலையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

"போதைப்பொருள் துஷ்பிரயோ கத்தில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி யாகக் கவனம் செலுத்த வேண்டிய விடயம் இது" என்று பேரா சிரியர் அதுகோரல குறிப்பிட்டார்.

இலங்கையில் ஐஸ் மற்றும் பிற சட்டவிரோதப் பொருள்கள் தாராள மாகப் பாவனைக்குக் கிடைக்கும் நிலைமையுடன் நாடு போராடி வரும் நேரத்தில் இந்த ஆய்வு முடி வுகள் வந்துள்ளன. இவை, போதைப் பொருள் அடிமையாதல் ஒரு பெரிய சமூக மற்றும் பொது சுகாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளமையை நமக்கு பெரும் சவாலாக உணர்த்தி நிற்கின்றன.

இதே சமயம், ஐஸ் உட்பட சிந்தெட் டிக் போதைப் பொருள்களின் நெருக் கடியும் அரசியல் ரீதியாக திருப்பத்தை எடுத்துள்ளது. சமீபத்திய வாரங்களில், இலங்கையில் ஐஸ் உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பாக பல அரசியல்வாதிகளின் பெயர்கள் வெளிவந்துள்ளன. விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் மேலும் நாட்டிற்குள் போதைப்பொருள் உற்பத்தி மற்றும் இயக்கத்தை எளிதாக்குவதில் சக்தி வாய்ந்த நபர்கள் ஒரு பங்கைக் கொண்டிருந்திருக்கலாம் என்று சட்ட அமலாக்க அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தப் பிரச்சினையில் இருந்து நாடு மீளுவது என்பது இமலாயச் சிக்கலாகத்தான் இருக்கும்.





# உள்ளூராட்சி வாரத்தின் ஓர் அங்கமாக சாவகச்சேரி நகரசபையின் மருத்துவ முகாம்

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபையானது உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கல்வயல் வட்டாரத்தில் மருத்துவ முகாம் நிகழ்வைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுத்துள்ளது.

இதன்போது நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள் இடம்பெற்றன. பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் வாசிப்பதற்கு ஏற்ற மூக்குக் கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

கல்வயல் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற மருத்துவ முகாம் நிகழ்வில் சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் ஸ்ரீபிரகாஷ், சபை உறுப்பினர்கள், லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 35 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்கள் மருத்துவ முகாம் ஊடாகப்பயனடைந்திருந்தனர்.

# தமிழ் தேசியம் என்பது கட்சியல்ல அது ஒரு இனம்!

## ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினர் நிலாந்தன் தெரிவிப்பு

(பழுவூரான்)

தமிழ் தேசியம் என்பது ஒரு கட்சியல்ல. அது ஒரு தேசிய இனம். உலகிலுள்ள தேசிய இனங்களில் தமிழ் தேசிய இனமும் ஒன்று.

இவ்வாறு சிரேஸ்ட ஊடகவியலாளரும் ஏறாவூர் பற்று பிரதேச சபை உறுப்பினருமான செ. நிலாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மகிழவெட்டுவான் விவேகானந்தா விளையாட்டுக் கழகத்துக்கான சீருடைகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு மகிழவெட்டுவானில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (22) இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 75 வருடங்களாக வட- கிழக்கில் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்று அபிவிருத்திகளை செய்தவர்களை இன்று மக்கள் புறக்கணித்துள்ளனர். அத்துடன் அவர்களை அவர்கள் சார்ந்த கட்சிகளும் புறக்கணித்துள்ளன. காரணம் அவர்கள் என்னதான் அபிவிருத்திகளை செய்தாலும்,



தங்களுக்கு சலுகைகள் கிடைக்கும் என்ற நோக்கத்துக்காகவே அவர்கள் அரசுடன் இணைந்து செயற்பட்டனர்.

அதனை அரச கட்சிகள் தெரிந்து கொண்டு ஒரு காலத்தில் அவர்களைக் கைவிட்டு விடுகின்றனர்.

ஆனால் தமிழரசுக் கட்சி என்பது தமிழ் தேசியத்தின் வழியில் பயணிக்கும் ஒரு கட்சி என்பதால்தான் அது கடந்த 75 ஆண்டுகளாக வடக்குக் கிழக்கில் வெற்றி பெற்று வருகிறது.

காரணம் தமிழரசுக் கட்சி ஒரு தேர்தலுக்கான கட்சி அல்ல. அது வடக்குக் கிழக்கிலுள்ள மண்ணுக்கும் மக்களுக்குமான கட்சி. இந்தக் கட்சியைத் தந்தை செல்வா உருவாக்கும் போது வெறுமனே தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்காக உருவாக்கவில்லை. தமிழ் அரசு என்பது வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கான நிழல் அரசாக செயற்பட வேண்டும் என்ற நோக்கில் அந்தக் கட்சி உருவாக்கப்பட்டது.

அந்த வகையில் தமிழ் தேசியத்தை வளர்ப்பதில் நாம் முன்னின்று செயற்பட வேண்டும்.

இலங்கையில் தமிழ் தேசியம் என்பது சிங்கள தேசியத்தில் இருந்து எந்த இடத்தில் வேறுபடுகிறது என்பது தான் கேள்வி.

வடக்குக் கிழக்கில் உள்ள மக்கள் சிங்கள பெரும்பான்மை அரசுக்கு நிகரான கட்டமைப்புகளைக் கொண்டு விளையாட்டுத்துறை, விவசாயம், கல்வி என்று அனைத்துத் துறைகளிலும் முன்னேற வேண்டும். அதற்கான கட்டமைப்புகளை உருவாக்கி செயற்படுவதற்கான வளங்களையும், உதவிகளையும் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது.

எமது இளைஞர்கள் எதிர்காலத்தில் இலங்கை தேசிய அணியில் இடம் பிடிக்கும் அளவுக்குத் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக எமது புலம்பெயர் சமூகமும் உதவிகளை வழங்க வேண்டும். புலம்பெயர் சமூகம் நினைத்தால் வடக்குக் கிழக்கில் அரசுக்கு இணையான பொருளாதார கட்டமைப்புகளை உருவாக்கி செயற்பட முடியும்.- என்றார்.




# லண்டனில் 'சிறப்பில் குன்றேறிய' நாட்டிய தரிசனம்

(மாதவி சிவலீலன்)

நாட்டியக்ஷேத்ரா நடனாலயத்தின் 26 ஆவது ஆண்டு விழா லண்டன் Winston Churchill Theatre இல் நடைபெற்றது. இது பரதக்கலை இரசிகப் பெருமக்களை மிகுந்த ஆனந்தத்தில் ஆழ்த்தியது.

இந்தப் பாடசாலையின் இயக்குனரும் குருவுமாகிய ஸ்ரீமதி திரிவேணி சங்கர் அடையாறு கலாக்ஷேத்ர நடனப்பள்ளியின் பழைய மாணவியாவார். அத்துடன் கர்நாடக சங்கீத்தத்தில் இளங்கலைப் பட்டமும் பரதக்கலையில் முதுகலைப் பட்டமும் பெற்றவர். இந்தத் தனித்துவமான கல்விப் புலமையும் அவருக்கேயுரிய ஆற்றலும் இணைந்து அன்றைய பொழுதை மாணவர்கள் மூலம் பிரகாசிக்க வைத்திருந்தன.

முதலாவது நிகழ்வாகத் 'தாள தரங்கம்' சிரேக்ஷ்ட மாணவிகள் எழுவரால் சிறப்பாக அரங்கேற்றப்பட்டது. அதற்கு இளங்கலைஞர்களினால் மிருதங்கமும் வயலினும் இசைக்கப்பட, மாணவிகள் நடனமாடி அரங்கைத் தம் வசப்படுத்தினர். குரு தன்னுடைய வித்தையைக் குறைவுபடாமல் மாணவர்களுக்குப் புகட்டித் தனக்கு ஈடாக அவர்களை உருவாக்கி, அவர்களது உயர்ச்சியில் தான் பெருமை கொள்ள வேண்டும். அது அன்று மேடை முழுவதும் வியாபித்திருந்தது.

அத்துடன் வர்ண உருப்படியின் போது குருவே நடன தாரகையாக அரங்கில் தோன்றித் தன் ஆற்றலை நிரூபித்திருந்தார். தன் மாணவிகளில் ஒருத்தியாக இளம் பெண்ணாக மிளிர்ந்தது போலக் காரைகாலம்மையார் நாட்டிய நாடகத்தில் காரைக்காலம்மையாராகவே, முதிய தோற்றத்தில் தோன்றி சபையைக் கலங்க வைத்திருந்தார்.

குருவாகவும் நடனக்கலைஞராகவும் அன்று அவர் செயற்பட்ட முறைமை உணர்வுபூர்வமாக அமைந்திருந்தது. மேலும் புஸ்பாஞ்சலி, ஸ்லோகம், ஜதீஸ்வரம், சப்தம், நந்தி கௌத்துவம் என மாணவர்களின் தரத்துக்கேற்ப ஒவ்வொன்றாக நடன உருப்படிகள் உருவாக்கப்பட்டிருந்தன.

மாணவிகளின் அபிநய வளம், முத்திரைகள், பாதத் தீர்மானத்தின் துல்லியம் கச்சிதமாகப் பொருந்தி பார்வையாளர்களைப் பரவசப்படுத்தின.

இடைவேளையின் பின்னர் காரைக்காலம்மையார் நாட்டிய நாடகம் அருமையாக அமைந்திருந்தது. பேராசிரியர் ஞானகுலேந்திரனின் பிரதியாக்கத்திலும் குரு வேணி யின் நடன உருப்படிகளிலும் நாட்டிய நாடகம் மெருகேறியிந்தமையைக் கண்கூடாகத் தரிசிக்க முடிந்தது. மாணவிகள் அனைவரும் தங்களது பாத்திரங்களை உணர்ந்து நடனத்தை ஆடியிருந்தனர். தொடர்ந்து பிரதம விருந்தினர் ஸ்ரீமதி சிவானந்தினி ஸ்ரீ கரனின் உரையும் மாணவர்களுக்கான விருது வழங்கல் நிகழ்வும் அழகாக நடந்தேறின. அனைவரதும் உடையலங்காரம் கண்ணுக்கு விருந்தாகின.

கணீரென்ற குரலில் நிகழ்வைத் தொகுத்து வழங்கிய சாருகன் வழங்கியிருந்தார்.

மேம்பட்ட கலையைத் தேடி இரசிப்பதென்பது வரம். அன்றைய பொழுது அந்தச் சபைக்கு வாய்ப்பாக இருந்தது. மண்டபம் முழுவது ஆயிரம் சூரியன்கள் ஒளிவீசியது போல கலைத் திகழ்ச்சி நிறைந்திருந்தது. மாணவர்களுக்கும் குருவுக்கும் மகிழ்ச்சியும் வாழ்த்துகளும் நிறையட்டும் என்று பார்வையாளர்கள் தெரிவித்தனர்.












# இந்திய உதவியுடன் நான்கு மாடி நோயாளர் விடுதி முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் விரைவில் அமையும்

## ரவிகரன் எம்.பியின் கேள்விக்கு அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவிப்பு





**(பா.சதீசன், விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டப் பொது வைத்தியசாலையில் தற்போது முறையான ஆண் மற்றும் பெண் நோயாளர் விடுதிகள் இன்மையால் கட்டில்கள் நிரம்பி நோயாளர்கள் பாதைகளில் பாய் விரித்து படுத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான அவலத்தில் நோயாளர்கள் மருத்துவம் பெறும் நிலை காணப்படுகிறது என்று சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், குறித்த நோயாளர் விடுதிகளை அமைப்பது தொடர்பிலும் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் இந்தியாவின் உதவியுடன் நான்கு மாடி நோயாளர் விடுதி வளாகத்தைக் கட்டவென தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தியாவுடன் அதற்கு உரிய ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ பதிலளித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (23) வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு கேள்வி எழுப்பிய நிலையில் அமைச்சர் மேற்கண்டவாறு பதில் வழங்கியுள்ளார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் உள்ள கஸ்ட மருத்துவமனைகள் பட்டியலில் உள்ள மாவட்ட பொது மருத்துவமனைகள், நான் வசிக்கும் வன்னியில் உள்ள மன்னார், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைகளே.

எட்டு ஆண்டுகளாக நிரந்தர நோயாளர் விடுதிகளை எதிர்பார்த்துக்கொண்டே இருக்கின்றோம்.

கட்டில்கள் நிரம்பி, வழியோரங்களில் பாய் விரித்து படுத்திருந்து மருத்துவம் பெறும் அவல நிலையில் தொடர்ந்தும் இந்த மாவட்ட பொது மருத்துவமனையை வைத்திருப்பது அரசின் ஓரவஞ்சனையாகவே பார்க்க வேண்டியுள்ளது. ஏனைய மாவட்டங்களில் உள்ளதைப் போல , எங்களின் மாவட்டத்திற்கான நிரந்தர நோயாளர் மருத்துவவிடுதிகளுக்கு அதிமுன்னுரிமை கொடுத்து கட்டித்தாருவீர்களா எனக் கேள்வியெழுப்பினார்.

இந்த நிலையில் இதற்கு சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ பதிலளிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் ஆண் மற்றும் பெண் விடுதிகள் தற்காலிக கட்டடங்கள் இரண்டில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்தியாவின் உதவியுடன் நான்கு மாடி மருத்துவ விடுதி வளாகத்தைக் கட்டவெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திட்டமுன்மொழிவை செயற்படுத்தத் தேவையான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் தொடர்புடைய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது. இந்திய உதவியுடன் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவை நிர்மாணிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நாங்கள் கையெழுத்திட்டுள்ளோம். அடுத்ததாக இந்த முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் நான்கு மாடி மருத்துவ விடுதிக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவோம்.

அதன் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைக்கென முன்மொழியப்பட்ட நான்கு மாடி மருத்துவ விடுதி வளாகத்தை நிர்மாணிப்பதற்கான உரிய மண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உரிய அறிக்கை 2024.06.23 அன்று Soil and Mineral Engineering (Pvt) Ltd நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளது.

இந்த கட்டடங்கள் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்கனவே உள்ள புரிந்துணர்வின் மூலம் கட்டப்பட்ட இருப்பதால், இரு நாடுகளுக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவேண்டும்.

இதற்காக வெளியுறவு அமைச்சின் ஒப்புதலையும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் திணைக்கள ரீதியான ஒப்புதலையும் பெறவேண்டும். அமைச்சரவை ஒப்புதலையும் பெறவேண்டும்.

இந்த நடவடிக்கைகள் முடிந்த பிறகு, முறையான பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி இந்த நடவடிக்கைகளைத் தொடங்கவுள்ளோம். நிச்சயமாக, அந்த மருத்துவமனைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ஆனால், கடந்த காலத்தில் தொடங்கப்பட்டு நிறுத்தப்பட்ட பல திட்டங்கள் உள்ளன என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தத் திட்டங்களில் பதினேழு பணிகளை முடிக்க அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுள்ளோம்.

மேலும் வரும் நாள்களில், நாற்பது பில்லியன் ரூபா அல்லது 4500 கோடியை ஒதுக்குவோம். கூடுதலாக அவை நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்குள் அவை 29 பில்லியனுடன் முடிக்கப்படவிருந்தன.

ஆனால் இப்போது நாங்கள் இரண்டு மடங்கு அதிகமாக செலவழித்து அந்தப் பணிகளை முடித்துள்ளோம்.

அதன்படி குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு தேவையான விடுதி வளாகங்களைக் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இலங்கை அரசின் நிதிக்கு கூடுதலாக, இந்திய அரசிடமிருந்தும் விசேட ஆதரவையும் பெறுவோம். – என்றார்.






# பிறைந்துரைச்சேனை சாதுலியா மாணவர்களுக்குக் கௌரவிப்பு!

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பிறைந்துரைச்சேனை சாதுலியா வித்தியாலய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாசிக்குடாவில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.எல்.நிஜாம்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 2024 மற்றும் 2025 ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களும் அத்துடன், சென். ஜோன்ஸ் அம்புயூலன்ஸ் கிட்டி அங்கத்தவர்கள், சிறுவர் விளையாட்டு போட்டியில் மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், ஓட்டப் போட்டியில் தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவன் எனப் பலரும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். எம்.தாஹிர் கலந்து கொண்டார். ஏனைய அதிதிகளாக ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பள்ளிவாசல் தலைவர்கள் பாடசாலை நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், மாணவர்களுக்கு நினைவுப் பதக்கம், சான்றிதழ்கள், பரிசில்கள் நினைவுச் சின்னங்கள் போன்றவை வழங்கி வைக்கப்பட்டன.






# மக்களின் பிரச்சினைகளை என்னிடம் முன்வையுங்கள்!

## தீர்வுகள் கிட்டும் என்கிறார் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் பாஸ்கரன்

(நூருல் ஹுதா உமர்)

பொது மக்களாகிய நீங்கள் பிரதேச சபையின் சொத்துக்களில், பிரதேச சபை மூலம் வழங்கப்படும் சேவைகளில் குறைபாடுகள் காணப்பட்டால் நீங்கள் நேரடியாக ஊடகங்களுக்கோ அல்லது சமூக வலைத்தளங்களிலோ தெரிவிப்பதற்கு முன்னர் என்னிடம் அல்லது பிரதேச சபை முறைப்பாட்டு இலக்கத்துக்கு அறிவியுங்கள். அதன் மூலம் தீர்வுகள் கிட்டும்.

இவ்வாறு காரைதீவு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட காரைதீவு, மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி மக்களுக்கு காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் எஸ். பாஸ்கரன் அறிவித்தலொன்றை விடுத்துள்ளார்.

அவரது அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



மக்களின் பிரச்சினைகள், குறைநிறைகளை 074 143 4646 எனும் இலக்கத்துக்கு அல்லது கடிதம் மூலமாகவோ நேரடியாகவோ பிரதேச சபை அலுவலகத்துக்குத் தெரிவியுங்கள். அவற்றை விரைவாக தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை என்னால் மேற்கொள்ளப்படும்.

காரைதீவு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேச சபைக்கு சொந்தமான சொத்துக்களை பராமரித்தல், புணரமைத்தல், பேணிப் பாதுகாத்தல் போன்ற விடயங்களில் தவிசாளராக நான் கூடுதலான அக்கறையுடன் செயற்பட்டு வருகிறேன். நான் தவிசாளராகப் பதவியேற்றதன் பின்னர் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை மேம்படுத்தும் நோக்கில் வீதி அபிவிருத்தி, மின்விளக்குப் பொருத்துவது போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றி வருகிறேன்.

எனினும் பிரதேச சபை எல்லைக்குள் இன்னும் பல உட்கட்டமைப்பு வேலைத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டியுள்ளது என்பதையும் நான் அறிவேன். எனது ஆட்சிக் காலத்துக்குள் படிப்படியாக இந்தக் குறைபாடுகளை என்னால் முடிந்தவரை நிறைவேற்றி வைக்க முடியும் என நினைக்கிறேன்.- என்றுள்ளது.



# ஆசிரியர் குறைவான பாடசாலைகளுக்கு தொண்டர் ஆசிரியர்கள் நியமிப்பு!

## இணைந்த கரங்கள் அமைப்பினர் நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இலுப்படிச்சேனை அம்பாள் வித்தியாலயத்தில் சில மாதங்களாக கணித பாடத்தை மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான ஆசிரியர் இல்லாத காரணத்தால் வலயக் கல்வி பணிமனை அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க இணைந்த கரங்கள் அமைப்பால் ஆசிரியர்களை வழங்கும் ஆரம்ப நிகழ்வு இலுப்படிச்சேனை அம்பாள் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இலுப்படிச்சேனை அம்பாள் வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கான கொடுப்பனவை இணைந்த கரங்கள் உறவுகள் ஊடாக பயணிக்கும் ஆஸ்திரேலிய நகையக உரிமையாளரான பாக்கியராசாவால் வழங்கப்படுகின்றது.

வெலிக்ககண்டி விபுலானந்தா வித்தியாலயம் மற்றும் மாவலையாறு கைலான் வித்தியாலயங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு இணைந்த கரங்கள் உறவுகள் ஊடாக வழங்கி வைக்கப்படுகின்றது.

மேலும் இந்நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் பிரதிநிதிகள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# காந்தீய வழியில் உயிர் நீத்த தியாகி திலீபன்!

ஈழப்போர் வரலாற்றில் எண்ணற்ற தியாகங்கள் !
எத்தனையோ பேர்கள் எங்கெல்லாம் உயிர் நீத்தனர்!
ஒன்றா இரண்டா ஓராயிரம் பேர் ஒவ்வொரு விதம்!
கண்டோம் மண்ணில் கலங்கி நின்றும் அழுதோம்!

கறுப்புகொடி கட்டியபோது திருமலை நடேசன் சுட்டுக்கொலை..!
எதிரியிடம் மண்டியிடாது நஞ்சை அருந்தினான் சிவகுமாரன்..!
குருதி சிந்தி போராடிய மாவீரர்கள் ஐம்பதாயிரமாம்!
கடல் தரை ஆகாயம் கரும்புலி என்று களத்தில் மடிந்தவர் ஏராளம்!

காந்திய வழியிலும் தன்னுயிர் வருத்தி தவம் இருந்தான்!
சாத்வீகம் வெல்லும் பாரதம் கேட்கும்என பார்த்தீபன் நம்பினான்!
பசியோடு பற்றுதல் கொண்டு பன்னிரெண்டு தினங்கள்!
உணவினை தவிர்த்து உயிரினை விட்டான் தியாகி திலீபன்!

மட்டக்களப்பு மாமாங்க கோயிலில் மாந்தராய் எழுந்தாள்!
மண்ணின் விடுதலை கண்ணாய் நினைத்தார் அன்னை பூபதி!
ஐம்பத்திநான்கு அகவை தனிலே உண்ணா நோன்பிருந்து!
உயிரை விட்ட கதையும் இந்திய அரசின் இயலாமையாலே!

செம்மணி செஞ்சோலை வல்வை வாகாரை வந்தாறுமூலை!
வீரமுனை கொக்கட்டிச்சோலை சத்துருக்கொண்டான்!
பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையும் மாண்ட உயிர்கள்!
கொத்துக்கொத்தாய் முள்ளிவாய்க்கால் நந்திக்கடலிலும்!

கொள்ளிவைத்த இனப்படுகொலைகள் தினம் தினம் நடந்தது!
பச்சிலம் குழந்தைகள் பாடசாலை மாணவர்கள் பெண்கள் ஆண்களும்!
பாதகர்கள் ஆட்சியிலே தொடர்ந்ததை உலகமும் அறியும்!
நீதியும் இல்லை தீர்வுகளும் இல்லை நிம்மதியும் இன்றும் இல்லை!

ஐ.நா. சபையும் ஆண்டொரு தடவை கூட்டம் நடத்தியும்!
மாண்டவர் கொலைக்கு மாண்புறு நீதி தரவும் இல்லை!
வேண்டி அழுது புலம்பி திரண்டு போராடியும் விடையில்லை!
மீண்டும் மீண்டும் வலியுறுத்துவோம் சர்வதேச நீதிக்காய்.!

-அம்பிளாந்துறையூர் அரியம்.



# “ஓய்வூதியத்துக்கு முன் ஆயத்தமாதல் வெற்றிகரமான முதியோர் வாழ்க்கை”

## *திருமலை செயலகத்தில் நிகழ்ச்சித் திட்டம்*

(ஹஸ்பர் ஏ.எச்.)

“ஓய்வூதியத்துக்கு முன்னர் ஆயத்தமாதல் வெற்றிகரமான முதியோர் வாழ்க்கை” எனும் தொனிப்பொருளின் கீழ் முதியோர் நிகழ்ச்சித் திட்ட நிகழ்வு நேற்று (23) நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் முதியோர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளர் கே. சதுர மிஹிதுனின் வழிகாட்டலுக்கமைவாக திருகோணமலை மாவட்ட செயலகப் பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் அவர்களின் முதியோர் வாழ்க்கையை வினைத்திறனாக வாழ வழிகாட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதுமையுடன் ஏற்படும் மாறிவரும் வாழ்க்கையைப் பற்றி அவர்களுக்கு விளக்கி, ஓய்வூதியம் தொடர்பான சட்டச் சிக்கல்களைப் புரிந்துகொண்டு, முதியோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, வெற்றிகரமான முதியோர் வாழ்க்கையை வாழ்வதற்கான வாய்ப்பை முதியோர்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டு இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முதியோர்களுக்கான தேசிய செயலகம் அரச, அரை அரச மற்றும் தனியார் பிரிவுகளில் பணிபுரியும் நபர்களுக்கு “ஓய்வூதியத்துக்கு முன்னர் ஆயத்தமாதல் வெற்றிகரமான முதியோர் வாழ்க்கை” ஓய்வூதியத்திற்கு முந்தைய திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அவர்களின் முதுமை வாழ்க்கையை சிறந்த வாழ்க்கையாக மாற்றுகிறது என்பது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இவ்வாறு தேசிய அளவில் 02 திட்டங்களாகவும், மாவட்ட ரீதியில் 25 நிகழ்ச்சித் திட்டங்களாகவும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஓய்வு காலத்தை அனுபவிப்பவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக எடுக்க வேண்டிய வழி காட்டல்கள், ஈ.ரி. எவ்., ஈ.பி.எவ். பெற்றுக் கொள்ளல், தனிப்பட்ட கோவைகள் பாதுகாப்பு மற்றும் கோப்புக்கள் தயாரித்தல், திட்டமிட்ட முதுமைப்பருவம் எனும் தலைப்புக்களில் விளக்கவுரைகள், வைத்தியர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களால் இதன்போது வழங்கப்பட்டது.

இதன்போது மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ். குருகுலசூரிய, மாவட்ட முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எல்.எம் இர்பான் மற்றும் துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





### புத்தளம் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில்

# பழைய மாணவியர் சங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட வீதி திறப்பு!



புத்தளம் தெற்கு கோட்டத்துக்கு உட்பட்ட கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பழைய மாணவியர் சங்கத்தினரால் சுமார் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலையின் உள்ளக பிரதான வீதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புத்தளம் தெற்கு பிராந்தியத்தில் பழைய மாணவியர் சங்கம் என்று இயங்கும் ஒரே பாடசாலையான கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பழைய மாணவியர் சங்கத்தினரால் இந்தத் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டமை வெற்றிகரமான நிகழ்வாக கருதப்படுகிறது.

பாடசாலையின் அதிபர் பீ. எம். முஸ்னி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அதிதிகளாகக் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் கே.எம்.எம். பைசர் மரிக்கார், புத்தளம் வலய பிரதிக் கல்விப் பணிபாளர்களான திருமதி சீ.ஐ. சுஜீவிகா சந்திரசேகர, திருமதி காந்திலதா, புத்தளம் தெற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ. எம். நௌஸாத், ஆசிரிய ஆலோசகர் எம். எம்.இஸ்மத், தெற்கு கோட்ட தமிழ் பாட இணைப்பாளர் வீ. லெஸ்லி, கொத்தாந்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஐ. என். எம்.எம்.லாஹிர், முன்னாள் அதிபர் (ஓய்வு நிலை) என்.எம். எம். நஜீப் மற்றும் ஊர் பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் உட்பட உறுப்பினர்கள், பழைய மாணவர் மற்றும் மாணவியர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# ஹெரோயின், ஐஸ் போதைப் பொருள்களுடன் சந்தேகநபர்கள் சம்மாந்துறை பொலிஸாரால் கைது!

(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம், புதிய கிராமம் பகுதியில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர்களை திங்கட்கிழமை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவினர் கைது செய்துள்ளர் என்று பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி என்.றிபாய்டீன் தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அசாரின் ஆலோசனைக்கு அமைய, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.என்.நிசாந்த பிரதிப்கு மாரவின் வழிகாட்டலுக்கமைய குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, நீண்ட காலமாக இளைஞர்களை இலக்குவைத்துச் சூட்சுமமான முறையில் வியாபாரம் செய்து வந்தர்களைக் கைது செய்துள்ளனர்.

வளத்தாப்பிட்டி இஸ்மாயில்புரம் பகுதியைச் சேர்ந்த 28 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் ஒருவரையும், கல்லரிச்சல் 04 பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும், வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் புதிய கிராமம் பகுதியைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் ஒருவரையும், சம்மாந்துறை 03 பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும் என 04 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 2 ஆயிரத்தி 321 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும், 380 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும், ஒரு தொகை பணம், கையடக்கத் தொலைபேசி, 03 வங்கி அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் மூவருக்கு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுக் கைது செய்யப்படாமல் தலைமறைவாகி இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இந்தியாவுடனான உறவுகள் மிகவும் முக்கியம் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



இந்தியா உடனான உறவுகள் அமெரிக்காவிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததவை என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்தியா மீது 50 சதவீதம் இறக்குமதி வரி விதித்ததைத் தொடர்ந்து இரு நாட்டு உறவிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியா – பாகிஸ்தான் இடையேயான போரை தான் நிறுத்தியதாக தொடர்ந்து அவர் கூறி வருகிறார். இதை இந்தியா திட்டவட்டமாக மறுத்து வருகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் இந்தாண்டு ஐ.நா, கூட்டத்தில் பங்கேற்பதை பிரதமர் நரேந்திர மோடி தவிர்த்துள்ளார். இதனையடுத்து இந்தியா சார்பில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்க ஐ.நா. பொது சபை கூட்டத்துக்கு சென்றுள்ளார். அங்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்க் ரூபியோவை, அவர் சந்தித்தார்.

இதன்போது வர்த்தகம், வரி, விசா கட்டணம் உள்ளிட்டவை தொடர்பாகவும், சர்வதேச பிரச்னைகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடினார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த சந்திப்பின் போது இந்தியா உடனான உறவுகள் அமெரிக்காவிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததவை என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. கூட்டணியில் இணையுமாறு டி.டி.வி தினகரனை வலியுறுத்தினேன்

## அண்ணாமலை தெரிவிப்பு

பா.ஜ.க. கூட்டணியில் மீண்டும் இணைய வேண்டும் என அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரனை வலியுறுத்தினேன் என்று தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மறைந்த நடிகர் எம்.ஆர்.ராதாவின் மனைவி கீதா ராதா காலமானதையொட்டி, சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் நடிகரும் பா.ஜ.க. நிர்வாகியுமான சரத்குமார், ராதிகா சரத்குமார் ஆகியோரிடம் அண்ணாமலை ஆறுதல் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்தின் அரசியல் களம் குறித்து அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரனிடம் பேசினேன். தி.மு.க. கூட்டணியை வீழ்த்த தேசிய ஜனநாய கூட்டணியால் மட்டுமே முடியும். எனவே என்.டி.ஏ. கூட்டணியில் மீண்டும் இணைய வேண்டும் என அவரிடம் வலியுறுத்தியுள்ளேன். முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட பலரையும் சந்திக்க உள்ளேன். அவரின் சுற்றுப்பயணம் முடிந்தவுடன் சந்திப்பேன்.

முதல்வரின் வெளிநாட்டு பயணம் குறித்து த.வெ.க. தலைவர் விஜய் பேசிய கருத்தை வரவேற்கிறேன். அவர் குற்றச்சாட்டை மறுக்கும்பட்சத்தில் முதல்வர் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.



தமிழகத்தில் கப்பல் கட்டுமான தளங்கள் அமைக்க மத்திய அரசு முதலீடு செய்வதை கூட ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர்.

நடிகர் ரஜினிகாந்தை அடிக்கடி சந்திப்பது வழக்கம். இதை அரசியலோடு முடிச்சுப்போட அவசியமில்லை. தனிக் கட்சித் தொடங்கினால் சொல்கிறேன்.” என்றார்.



# விஜய் விமர்சிப்பதை அனுமதிக்க முடியாது

## செல்வப்பெருந்தகை கருத்து

த.வெ.க. தலைவர் விஜய் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை இன்று சென்னையில் இருந்து விமானம் மூலம் பிஹார் மாநிலத்துக்கு சென்றார். முன்னதாக, சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“பாட்னாவில் வாக்குத் திருட்டு பேரணியை ராகுல் காந்தி நடத்தி வந்தார். இந்த விவகாரம் குறித்து விவாதிக்க இருப்பதால் நான் பிஹார் மாநிலம் செல்கிறேன்.

கூட்டணியில் காங்கிரஸ்/க்கு கூடுதல் சீட்கள் வேண்டும் என்று கட்சியினர் தங்களுடைய ஆசையை சொல்கிறார்கள். இது கூட்டணிக்குள் சலசலப்பை ஏற்படுத்தாது. கட்சியினர் கருத்துகளை காங்கிரஸ் தலைமையிடம் தெரிவிப்பேன். ஆனால், முடிவு எடுப்பது காங்கிரஸ் தலைமையும், பொறுப்பாளர்களும் தான்.

த.வெ.க-வுடன் கூட்டணி குறித்து காங்கிரஸ் கட்சி மறைமுகமாக எதுவும் பேசவில்லை. நாங்கள் எதற்கு மறைமுகமாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அதற்கு, என்ன தேவை இருக்கிறது? எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணியில் எந்த மாற்றமும் வராது.

தமிழகத்திலும், மத்தியிலும் காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக இல்லை. எங்களை விமர்சிக்க ஒன்றும் இல்லாததால், த.வெ.க. தலைவர் விஜய் எங்களை விமர்சிக்கவில்லை. விஜய் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் அவர் என்ன பேசுகிறார் என தெரியும். விஜய் கட்சிக்கு கூட்டம் நடத்த பிரசாரம் செய்ய அரசு அனுமதி தர மறுப்பதாக கூறுகிறீர்கள். காங்கிரஸ் கட்சிக்கு மட்டும், அரசு உடனே அனுமதி தருகிறதா?

ஒவ்வொரு போராட்டத்துக்கும் போராடித்தான் அனுமதி வாங்க வேண்டியதாக இருக்கிறது. இந்த நான்கரை ஆண்டுகளில், போராட்டம் நடத்தியபோது, என்னை கைது செய்து உள்ளார்கள். அதற்காக நாங்கள் ‘போலிஸ் கைது செய்து விட்டது. அரசு நெருக்கடி தருகிறது’ என்று சொல்ல முடியுமா? அவர்கள் வேலையை, அவர்கள் செய்கிறார்கள். காங்கிரஸ் கட்சி எப்போதும், ஜனநாயகத்தின் பக்கம் தான் இருக்கும்.” என்றார்.

# உக்ரைன் போரைத் தொடர இந்தியா, சீனாவே காரணம்

## ட்ரம்ப் தெரிவிப்பு



உலகில் பயங்கரவாதத்திற்கு ஆதரவு அளிப்பதில் ஈரான் முதலிடத்தில் உள்ளதாகவும், ஈரான் அணு ஆயு தங்களை வைத்துக் கொள்ள அனு மதிக்க முடியாது எனவும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் முடிவுக்கே வராத போர்கள் எனப் பலரும் கூறிய, 7 போர்களை நிறுத்தியுள்ளதாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

கம்போடியா – தாய்லாந்து, கொசோவா – செர்பியா, இந்தியா – பாகிஸ்தான், இஸ்ரேல் – ஈரான், எகிப்து – எத்தியோப்பியா, அர்மீனியா – அசர்பைஜான் மற்றும் கொங்கோ – ருவாண்டா நாடுகள் என 7 போர்களைத் தாம் நிறுத்தியதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த போர்களை நிறுத்த தங்களுக்கு உதவுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை முயற்சிக்கவில்லை எனவும் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவின் பொற்காலம் இது எனக் குறிப்பிட்ட ட்ரம்ப், அமெரிக்கப் பங்குச்சந்தை உச்சத்தில் உள்ளதாகவும், முதலீடுகள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பல்வேறு நாடுகளுடன் அமெரிக்கா வரலாற்றுச் சிறப்பு மிக்க வர்த்தக ஒப்பந்தம் செய்துள்ளதாகவும் ட்ரம்ப் தெரிவித்தார்.

உக்ரைன் போர் தொடர முக்கிய காரணம் இந்தியா மற்றும் சீனா எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ரஷ்யாவிடம் எண்ணெய்யை தொடர்ந்து கொள்வனவு செய்வதன் மூலம் சீனா மற்றும் இந்தியா, யுக்ரைன் போருக்கு முக்கிய நிதியுதவி அளிப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

# பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது ஹமாஸின் செயல்களுக்கு வெகுமதி

## அமெரிக்க அதிபர் சீற்றம்



பாலஸ்தீனத்தை தனி அரசாக அங்கீகரிப்பது, ஹமாஸ் அமைப்பினரின் மோசமான செயல்களுக்குக் கிடைக்கும், வெகுமதியாகும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்றுவரும் 80 ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத் தொடரில், உரையாற்றும் போது ட்ரம்ப் இதனைக் கூறியுள்ளார்.

அமைதியை விரும்புபவர்கள் ஹமாஸ் அமைப்பினரால், கடத்தப்பட்ட இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுதலை செய்யக் குரல் கொடுக்க வேண்டும் எனவும் இதன்போது அவர் வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, பாலஸ்தீனத்தை தனி அரசாக அங்கீகரிப்பதாக இங்கிலாந்து, கனடா மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் அறிவித்திருந்தன.

இந்த நிலையிலேயே ட்ரம்ப் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



# நோர்வேயில் அடுத்தடுத்து குண்டு வெடிப்புகள் பதிவு

## மக்கள் வெளியே வரத் தடை

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் அடுத்தடுத்து குண்டு வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்துடன் சந்தேகப்படும்படியான மூவரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்னளர்.

பார்க்வீன் மற்றும் பைல்ஸ்ட்ரெட் பகுதியில் இந்த இரண்டு குண்டுவீச்சு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

இதனால் அந்த பகுதியில் வசிப்போர் மிகவும் அச்சமடைந்துள்ளனர்.

குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த நோர்வே பொலிஸார் , அந்த பகுதியைச் சுற்றி வளைத்து, தேடுதல் வேட்டை நடத்தினர்.

அப்போது அங்கு வெடிக்காமலிருந்த கையெறி குண்டு ஒன்றைக் கண்டு பிடித்து, செயலிழக்கச் செய்தனர்.

மேலும், அங்கு சுற்றித்திரிந்த சந்தேக நபர்கள் மூவரைக் கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

மேலும், சம்பவம் நடந்த இடம், தற்போது முழுமையாக பொலிஸ் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக ஒஸ்லோ பொலிஸ் தலைவர் பிரையன் ஸ்கொட்னஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிஸ்லெட் விளையாட்டு அரங்கத்திலிருந்து வான் ஒன்று சந்தேகத்துக்கு இடமாகச் சென்றதாக உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர் எனவும் வானிலிருந்து கையெறி குண்டுகளை அவர்கள் வீசிச் சென்றனர் என்றும் சம்பவத்தைக் கண்ட சிலர் தெரிவித்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குண்டுகள் வெடித்த பகுதிக்குள் எவரும் நுழைய வேண்டாம் என்றும், குடியிருப்புகளை விட்டு வெளியே வர வேண்டாம் எனவும் அப்பகுதி மக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.








பக்கங்கள் - 02
கனடா முரசு
புதன்கிழமை 24/09/2025

**பொலிஸாரை மலினப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டார் கரி ஆனந்தசங்கரி**



C2▶



# ஒட்டாவா தெற்கில் 100 ஏக்கர் காட்டுத் தீ

## அவசரநிலை அறிவிப்பு




கனடாவின் வடக்கு டுன்டாஸ் பகுதி தீயணைப்புத் துறையினர், ஒட்டாவா நகரின் தெற்குப் பகுதியில் ஏற்பட்ட 100 ஏக்கர் காட்டுத் தீயை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மோர்வுட் ஒன்டாரியோ அருகிலுள்ள அல்வின் ரன்னால்ஸ் காட்டில் ஞாயிறு இரவு தீ பரவியது. “தற்போது தீ கட்டுப்பாட்டுக்கு உட்படவில்லை, ஆனால் காடு பகுதிக்குள் மட்டுமே பரவியுள்ளது. யாருக்கும் காயம் ஏற்படவில்லை, எந்தக் கட்டிடங்களுக்கும் ஆபத்து இல்லை” என்று நகராட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

C2▶

# ஒன்றாறியோ விபத்தில் அமெரிக்கர் ஒருவர் பலி



கனடாவில் இடம்பெற்ற விபத்தொன்றில் அமெரிக்கர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கனடாவின் ஒன்றாறியோவிலுள்ள Queen Elizabeth Way நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த ட்ரக் ஒன்றின் சக்கரம் ஒன்று திடீரென கழன்று ஓடியது.

வேகமாக உருண்டோடிய அந்த சக்கரம் இரண்டு வாகனங்கள் மீது மோதி பிறகு கிழே சாய்ந்துள்ளது.

அந்த சக்கரம் மோதியதில், ஒரு கார் பலத்த சேதமடைய, அந்த காரை ஓட்டிய 53 வயதான சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

C2▶

# பொலிஸாரை மலினப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டார் கரி ஆனந்தசங்கரி



கனடிய பொலிஸை மலினப்படுத்தும் வகையில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி கருத்து வெளியிட்டார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட துப்பாக்கிகளை மீள ஒப்படைப்பது தொடர்பில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

தடை செய்யப்பட்ட ஆயுதங்களை ஒப்படைக்காவிட்டால் தண்டனை விதிக்கப்படாது எனவும் பொலிஸாருக்கு சட்டத்தை அமுல்படுத்த போதியளவு வளங்கள் கிடையாது எனவும் கரி ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.

பெயர் குறிப்பிடப்படாத துப்பாக்கி உரிமையாளர் ஒருவருடன் கரி ஆனந்த சங்கரி தொலைபேசியில் உரையாடும் உரையாடல் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த உரையாடல் தற்பொழுது கசிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் கரி ஆனந்தசங்கரிக்கு தெரியாமலேயே இந்த தொலைபேசி உரையாடல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக தெரிந்த ஒருவர் தமது அனுமதியின்றி தொலைபேசி உரையாடலை பதிவு செய்து துப்பாக்கி ஆர்வலர்களிடம் வழங்கியுள்ளார் என கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமது கருத்து பிழையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்தின் திட்டத்தை நடுமுறைப் படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சர் கரி ஆனந்தசங்கரியிடம் நாடாளுமன்றிலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதுவேளை, தடை செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருப்போருக்கு நியாயமான நட்டஈடு வழங்கப்படும் என அரசாங்

# கனடாவில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 15 வயதுச் சிறுவன் பலி



கனடாவில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 15 வயது சிறுவன் கொல்லப்பட்டுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடாவின் க்யூபெக் மாகாணம், லோங்குவெயில் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 15 வயது நூரான் ரெசாய் உயிரிழந்த சம்பவம் சமூகத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சிறுவனின் தந்தை ஷரிப் ரெசாய், மகன் எந்த தவறும் செய்யவில்லை எனக் கூறி, எங்களுக்கு நீதி வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

“என் மகன் எப்போதும் சிரித்துப் பிறரைக் கவர்ந்த பையன். அவர் குழந்தை மட்டுமே. இந்தக் கொலை நியாயமல்ல” என தந்தை தெரிவித்துள்ளார்.

புத்தக பையை வைத்திருந்த மாணவன் மீது ஏன் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் 5 விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, மான்ட்ரியால் பொலிஸாரின் உதவியுடன் சம்பவத்தை விசாரணை செய்கின்றனர்.

## ஒட்டாவா தெற்கில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீ பரவலைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தற்போது தீ காடுக்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அருகிலுள்ள குடியிருப்புகளை வெளியேற்றத் தேவையில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

திங்கள்கிழமை இரவில் மழை பெய்யும் என வானிலை முன்னறிவிப்பு கூறியுள்ளது.

மழை தீ பரவலைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறதாலும், அதன் விளைவுகளை செவ்வாய்க் கிழமை காலை வரை உறுதியாகக் கூற முடியாது என நகராட்சி தெரிவித்துள்ளது.

## ஒன்றாறியோ...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் ஒரு அமெரிக்கர் ஆவார்.

அவருடன் அதே காரில் பயணித்த 52 வயதுடைய பயணி ஒருவர் காயமடைந்த நிலையில், அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உயிருக்கு ஆபத்து இல்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சக்கரம் கழன்று ஓடிய ட்ரக்கின் சாரதியும் ஒரு அமெரிக்கர்தான். பாதுகாப்பற்ற ஒரு வாகனத்தை ஓட்டிய அந்த 33 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது ட்ரக்கின் முன் சக்கரம் கழன்று ஓடிய நிலையிலும், அவருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.